சாதி மத பேதமின்றி நோயாளிகளைப் பேணும் ஆஸ்பத்திரிகளுக்கு நன்கொடைகள், சமய ஸ்தாபனங்களுக்கு, அநாதை இல்லங்களுக்கு நன்கொடைகள், பல்கலைக் கழக இந்து சமய பீடத்திற்கு நிதியுதவி, அகதிகள் புனர்வாழ்வுக்குதவி, மறைநூல்களை இலவசமாக வெளியிட்டுதவுதல் போன்ற பல்வேறு சமூகப்பணிகள் இந்தக் கோவிலின் பெயரால் இடம்பெற்று வருகின்றன. இவைகளுக்குச் சிகரம் வைத்தாற் போல், அநாதரவான சைவச் சிறுமிகளைப் பேணி வளர்ப்பதற்கான மாடிக் கட்டிடம் ஒன்றை துர்க்காபுரத்திலேயே இவர்கள் கட்டி முடித்து அண்மையில் திறப்பு விழா நடாத்தியுள்ளனர்.

சிறுமிகள் தங்கியிருக்கவும், கல்வி, தொழில் பயிற்சிகளைப் பெறவும் இங்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. 11 லட்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரூபா செலவில் உருவாக்கப்பட்டுள்ள சகல வசதிகளும் கொண்ட இந்த விசாலமான மாடிக் கட்டிடத்தில் அறங்காவல் குழுவின் தலைவர் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தமது மணிவிழாவின் போது சேர்ந்த அன்பளிப்புகளில் ஒரு பகுதியை இங்கே ஒரு நூல்நிலையம் அமைப்பதற் கென்றே வழங்கியிருப்பதாக அறிகின் றோம்.


தெய்வீகப் பணியொன்றினைச் சிறப்புச் செய்யும் ஒரு வாய்ப்பினைப் பெற்றுள்ள இவ்வம்மையார், அந்த வாய்ப்பின் வரப் பிரசாதம் சமூகத்தின் ஏனையவர்களுக்கும் கிடைக்க வேண்டுமென்பதில் கருத்தாய் இருந்து வருவதையே இச்செயல் காட்டு கின்றது.

சோதனைமிக்க இக்காலத்தில் தமிழர்கள் ஈவிரக்கமின்றிக் கொலை செய்யப்படு வதனால் அநாதைகளாகிவிடும் நம் சகோ தரச் செல்வங்களுக்கு இப்படியான இல் லங்களே உறுதுணை அளிக்க முடியும்.

ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாகத்தின் முன் மாதிரி இன்னும் பல நிர்வாகங் களின் கண்களைத் திறக்கும் என்று நம்பு வோம்.

**கௌரவ ஆசிரியர்**
ஈழநாடு

✻



"இரண்டு வரங்கள்" நாடகத்தில்
இல்லச் சிறுமி செல்வி வி. வடிவாம்பிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் ஸ்ரீ குருவே நம

# வாழ்த்துரை

எமது மகளிர் இல்லம் சைவப் பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டது. எனவே இங்கே வளரும் பெண் குழந்தைகள் நல்ல சைவத் தமிழ்ப் பண்பாட்டுப் பயிர்களாகவே வளர்க்கப்படுகின்றார்கள்.

தேவஸ்தானம் உணவு, உடை, உறையுள், கல்வி, ஆரோக்கியம் என்பவற்றைச் சிறந்த முறையில் கவனிப்பது போலவே; ஒழுக்கம் பண்பாடு நுண்கலைத்திறன் ஆகியவற்றிலும் ஆழ்ந்த கவனம் செலுத்துகிறது.

பெற்ற தாயாகத் துர்க்கை அம்பாளையும், பெரிய தாயாகத் துர்க்கா துரந்தரி அம்மாவையும் சுவீகரித்துக் கொண்டுள்ள இவ்வில்லத்துப் பெண் குழந்தைகள் அப்பர் காட்டிய சரியை நெறியில் இயல்பாகவே தலைப்பட்டுள்ளனர்.

வைகறையில் புனிதமாக ஆலயத்தில் திருவலகிடுதல், கழுவுதல் முதலிய தொண்டுகளைச் செய்கின்றனர். பிற்பகலிலும் இவற்றைச் செய்வதுடன் ஆலய மடைப்பள்ளிப் பாத்திரங்களைத் தூய்மை செய்தல், தெய்வத் திருமேனிகளை அலங்கரிக்கும் பட்டுகள், அந்தணர்கள் பூசை வேளையில் பயன்படுத்தும் ஏனைய துண்டுகள், திரைகள் என்பவற்றை நல்ல முறையில் தூய்மை செய்கிறார்கள்.

ஆலய மண்டபங்களின் வாயில்கள், இல்லத்தின் பிரதான வாயில்களில் கோலமிட்டு அலங்கரிக்கிறார்கள். தினசரி அட்டவணைப்படி அம்பிகைக்கு மாலை தொடுக்கிறார்கள். இவ்விரு கலைகளுக்கும் ஆலயமே இவர்களுக்கு முதல் வழிகாட்டி.

மகோற்சவ காலத்தில் அம்பாளின் திருவுலாவுக்கு விதம்விதமான வண்ண மாலைகள், சரங்கள், ஆரங்களை அழகுற ஆக்கியளிப்பது இந்தப் பிஞ்சுக் கரங்களே. பட்டுத் துணிகள், மணிகளைக் கொண்டும் அழகிய மாலைகள் அமைக்கப் பயின்று உள்ள இவர்கள், கோலக் கலையிலும் சிறந்த பயிற்சியும், ஈடுபாடும் கொண்டுள்ளனர்.

மாப்பொடி, வண்ணக் கலவைகள், தேங்காய்ப்பூ, மலர்கள், இலைகள், மணிகள் என்பவற்றைப் பயன்படுத்தி விதம்விதமான கோலங்களை அமைப்பார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிகை நாட்கள், நூல்வெளியீடு போன்ற விழாக்கள், திருமண வைபவங்கள், நவராத்திரிக் காலம் ஆகியவற்றில் மண்டப வாசல்களிலும், ஆலயத்தில் வசந்த மண்டபத் திருமுன்பாகவும் தானியங்கள், வண்ணங் கலந்த தேங்காய்ப்பூ ஆகியவற்ருல் அமைத்திடும் மிக அழகிய கோலங்களில் எமது பிள்ளைகளின் கைவண்ணமும், கலை வண்ணமும் மிளிரக் காணலாம்.

தற்போது எளிதாகக் கிடைக்கக்கூடிய பொருட்களைக் கொண்டு பொம்மைகள் முதலிய கைப்பணிப் பொருட்கள் தயாரிப்பதிலும் ஊக்கத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

வருங்காலச் சைவத் தமிழ் உலகுக்கு மிகப் பயனுள்ள பங்களிப்பினை இவர்கள் ஆற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை,

இவர்கள் வாழ்வு மென்மேலும் சிறப்புற அன்னைதுர்க்கையை நாமும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சகோதரி யதீஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இரண்டு வரங்கள்"
நாடகத்தில் கூனி வேடந்தாங்கிய
செல்வி ம. பிரேமாவதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைச் செய்திகள்

தினகரன்
18-01-1984

## ஆலயங்கள், கலாசாரம், பண்பாடு வளர்க்கும் அமைப்புகளாக மாறவேண்டும்

யாழ்ப்பாண எம். பி. கூறுகிறார்........

"ஆலயங்கள் வெறுமனே வழிபாட்டுக்குரிய நிலையங்களாக இராது சமய, சமூகப் பணிகளை மேற்கொள்வதுடன் எமது கலை, கலாசாரம், பண்பாடு ஆகியவற்றை வளர்க்கும் அமைப்புக்களாகவும் மாறவேண்டும். தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கை அம்மன் தேவஸ்தானம் இத்துறையில் சமூகப் பணியின் ஓர் அம்சமாக துர்க்கை மகளிர் இல்லத்தை ஆரம்பித்து ஆதரவற்ற பெண் பிள்ளைகட்கு வாழ்வளிக்க முன்வந்துள்ள செயற்பாடு சைவ உலகம் பாராட்டவேண்டிய ஒன்றாகும்." இவ்வாறு யாழ்ப்பாண எம். பி. திரு. வி. தர்மலிங்கம் அவர்கள் கூறினார். மகளிர் இல்லத்திற்கு சுமார் பல இலட்சம் ரூபா செலவில் கட்டப்பட இருக்கும் மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல்லை அவர் நாட்டிவைத்தார். பிரதிஷ்டாவித்தகர் சிவஸ்ரீ [illegible] குருக்கள் இதற்கான கிரியைகளை நடாத்திவைத்தார்.

தேவஸ்தான நிர்வாகச் சபைத் தலைவி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வைபவத்திற்குத் தலைமைவகித்தார். அவர் தமது உரையில் இறைவனது திருக்கோயில்கள் அறநெறிகளை வளர்க்கும் இடங்களாக மாறவேண்டும் என்றார்.

மேலும் ஆதரவற்ற சிறுமிகளைச் சேர்த்து அவர்களுக்கான வசதிகளை அளிக்கவே மாடிக் கட்டிடம் உருவாக இருக்கின்றது. இத்திருப்பணி இவ்வாண்டு மேற்கொள்ளும் முக்கிய செயற்பாடாகும் என்றும் அவர் சொன்னார்.

## "ஆற்றல்களை இறைவன்பால் திருப்பினால் வாழ்க்கை மேலும் சிறக்கும்"

ஈழநாடு
8-2-84

துர்க்காபுரத்தில் மாவட்ட நீதிபதி அறிவுரை

"எமக்குள்ள ஆற்றல்கள் இறைவனால் தரப்பட்டவையாகும். ஆகவே அந்த ஆற்றல்களை நாம் இறைவன்பக்கம் திருப்பவேண்டும். அப்போதுதான் இறையருளுடன் எமது வாழ்க்கை மேலும் சிறப்படையும்."

இவ்வாறு தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் ஆண்டு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றிய மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சி. வி. விக்கினேஸ்வரன் அவர்கள் கூறினார்.

"துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் மேலும் கூறியதாவது, துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் ஆதரவற்றவர்களுக்கு வாழ்வு அளிக்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது. ஆனால் அவர்களை ஆதரவற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்கள், கதியற்றவர்கள் என்று கூறுவது தவறு. இத்தாலியில் இருந்துவந்து இங்கு பல ஆண்டு காலம் வாழ்ந்து முதுமையடைந்த ஒரு கிறிஸ்தவப் பாதிரியாரிடம் உங்கள் சொந்தக்காரர்கள் பற்றி உங்களுக்கு அக்கறையில்லையா? என்று கேட்டபோது அவர் தோட்டத்தில் வளர்ந்திருந்த பூச்செடிகளைக் காட்டி இவைகள்தான் எனது சொந்தக் காரர்கள், இத்தனை குழந்தைகள் இருக்கும்போது நான் ஏன் கவலைப்படவேண்டும் என்று கூறினார். அதையே நாமும் நினைக்கவேண்டும்.'' ஆதரவற்றவர்களுக்கு நாம் எல்லோருமே சொந்தக்காரர்கள். ஆகவே அவர்களது நல்வாழ்வில் நாம் கவனம் செலுத்தவேண்டும் என்றார்.

தினகரன்
5-2-1986


முன்னை நாள் அரச அதிபர் கூறுகிறார்

வாழ்க்கையில் ஆதரவற்றவர்களையோ அல்லது ஆதரவு குறைந்தவர்களையோ ஆதரிக்கும் பண்பு எமது பண்பாட்டிற்குப் புதியதல்லதாயினும், தனிப்பட்ட ஒருவருக்கு மாத்திரம் உதவுவது சமூகசேவையாகாது என்பதை உணர்ந்து ஒரு கணிசமான தொகையினர்க்காயினும் உதவவேண்டுமென்னும் உயர்ந்த நோக்கத்தின் பெறுபேறே தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லமாகும். குறிப்பாகக் கூறின், இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் இத்தகைய ஒரு பெருமுயற்சி வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது இதுவே முதற் தடவையாகும் என்று அரசாங்க அதிபர் திரு. வி. எம். பஞ்சலிங்கம் அவர்கள் இல்லத்தின் கட்டடத் திறப்புவிழாவில் கூறியது நினைவுபடுத்த வேண்டிய வாசகமாகும்.

## வாழ்வளிப்பு நிலையம்

தெல்லிப்பழை துர்க்காதேவியின் அருளாட்சியில் இயங்கும் துர்க்காபுரம் மகளிர் இல்லம் தன்னுடைய செயற்பாட்டில் மேலும் விரிவடைந்து செல்வதைப் புலப்படுத்தும் வகையில் அமைந்துள்ளது புதிய கட்டடமாகும். ஆலயம் என்பது ஒரு வழிபாட்டு நிலையம் என்றவகையில் நிலவும் பொதுவான கருத்து நிலையினை மாற்றி அமைத்து அது வாழ்வளிக்கும் ஒரு நிலையமாகும் என்பதனைச் சாதனைகளால் செய்துகாட்டிவரும் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அறங்காவற் குழுவினருக்கும் அதன் உயிர் நாடியாக நின்று யாவற்றையும் செயற்படுத்தும் துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கும் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. பண்டைக்காலத்தில் ஆலயங்கள் சமூகத்தின் பல்வகைப் பணிகளையும் செய்து சமூக மத்திய நிலையங்களாக விளங்கின என்பதை வரலாறுகள் காட்டுகின்றன. அத்தகைய நிலையை மீண்டும் எமது காலப்பகுதியிலும் ஏற்படுத்தலாம் என்பதனைத் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பல்வேறு வகைப்பட்ட சமூகத் தொண்டுகள் மூலம் எமக்கு எடுத்துக் காட்டி வருகின்றனர். தேவஸ்தான வருவாயில் சமூக பண்பாட்டிற்குரிய அறப்பணிகள் பலவற்றைச் செய்யும் அவர்கள் அவற்றின் ஒரு பகுதியாக ஆதரவற்ற பெண்களுக்கு வாழ்வழிக்கும் மகளிர் இல்லத்தை நடத்திவருகின்றனர். இவர்களது இச் செயற்பாடு ஈழத்தின் ஏனைய சைவ ஆலயங்களும் பின்பற்றக்கூடிய ஒரு முன்மாதிரியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகளிர் இல்லத்தின் மெய்வல்லுநர் சுவட்டுமைதானப் போட்டியில் சிறந்த வீராங்கனையான விருதினை செல்வி க. தயாநிதி பெறுகிறார்.



நடனமிடும் இல்லச் சிறுமியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.

## மகளிர் இல்லத்துப் பிள்ளைகளின் கருத்துகளின் தொகுதி

# அன்னையின் அருட் பெருக்கும் அம்மாவின் அரவணைப்பும்

எப்படிச் சொல்வேன்! என்னென்று போற்றுவேன்! சொல்லுக்கடங்காத தூய வாழ்வு ஒன்றை எட்டு ஆண்டுகள் துர்க்கா புரம் மகளிர் இல்லத்தில் பெற்றுப் பெருமை அடைந்தவள் நான். எங்கள் பெருமைமிகு துர்க்கா புரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அம்மையாரின் அரவணைப்பில் எட்டு ஆண்டுகள் மகிழ்ச்சியாகக் கழித்து இன்று பிரான்ஸ் நாட்டின் பரிஸ் நகரில் எனது சகோதரனுடன் வாழ்கிறேன். எனக்கு இப்பொழுது வயது 22. எமது திருமணம் என்ற ஒரு காட்டுத்தீ முன் வைத்து என்னை இங்கே கூட்டி வந்து விட்டார்கள். 1990 ஆவணியில் இங்கு வந்தேன். துர்க்காதேவி கலைகளை தெய்வமாக நின்று என்னை அழைத்து அன்னையுடன் சேர்த்திருக்கிறது. ஆனால் பெற்றுவகை நாகரீகமும் போலிப் பகட்டு வாழ்வும் எனக்கு ஒரு வெறும் புன்னகையே தருகிறது. என்ன செய்வேன்! தந்தையும் தாயும் இல்லாத எனக்கு இப்படி ஒரு வாழ்வு வரும் போது எப்படி மறப்பது! எனவே பிரான்ஸ் நாட்டில் இருந்து எழுதி விட்டேன்.

1983ஆம் ஆண்டு எனது தாயும் நானும் என் தங்கையும் துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் எனது சித்தப்பா மூலம் சேர்க்கப்பட்டோம். சிவசிதம்பரவர்களதும் நிர்வாக சபையினதும் அனுசரணையுடன் தெல்லிப் பழை சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் பின்பு தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் கல்விகற்றேன். G. C. E. (O/L) கற்றபின் மன்றுகம் திருமகள் அழுத்தகத்தில் தொழில் வாய்ப்புப் பெற்று ஓராண்டு காலம் பணிசெய்தேன். எங்கள் பெரியம்மாவின் திருமுறைமடத்தில் மூன்று வருடங்கள் தொடர்ந்து ஓய்வுநேரப் பணிகளைச் செய்து அம்மையாரின் பெருமதிப்பையும் பெற்றேன்.

ஆனால் இன்று எனது சுற்றத்தவர்களின் வற்புறுத்தலின் பேரில் இங்கு வந்து முடங்கிக் கிடக்கிறேன். துர்க்காபுரம் மகளிர் இல்லம் பத்தாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன். என் அன்புத் தங்கைகள் அனைவரையும் வாழ்த்துகிறேன். என்னை நெறிப்படுத்திய இல்ல உத்தியோகத்தர்களை வணங்குகிறேன். ஆலய நிர்வாக சபையினரை கை கூப்பித் தொழுகிறேன்.

மகளிர் இல்லம் வளரட்டும்!
வாழட்டும்!
எம்போன்றோர் உயரட்டும்!

**செல்வி த. லீலாவதி**

34, ரூ டூ லா செக்ஸ்
கைதன்,
75020 பரிஸ், பிரான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மகளிர் இல்லத்தின் முதல்நாள் அனுபவம்

என்னை 06-10-1985இல் 8 வயதளவில் எனது தாயார் கோவிலுக்குக் கூட்டிச் செல்வதாகக் கூறி ஒரு இல்லத்திற்குக் கூட்டி வந்தார். அங்கு அம்மன் கோவிலடியில் இருந்த மடத்தில் ஒரு அழகான அம்மையார் இருந்தார். அவரிடம் அம்மாவும் நானும் சென்றோம். அப்போது எனது அம்மா அங்குள்ள இல்லத்திற் சேர்ப்பதற்கு அனுமதி கேட்டார். அந்த அம்மாவும் எங்கள் நிலையைப் பார்த்ததும் சம்மதித்தார். என்னை அன்பாக அருகில் அழைத்து என் பெயரையும் ஊரையும் கேட்டு ''நல்ல பிள்ளை'' என்று சொல்லிப் புன்னகை செய்தார். பின் ஒரு ஆசிரியரைக் கூப்பிட்டு என்னை இல்லத்தில் விடும்படி சொன்னார். மதிய உணவுக்குப்பின் அம்மா வீடு திரும்பினார். பின்பு நான் உடை மாற்றி விட்டு என் வேலைகளைக் கவனித்தேன். என்னைச் சுற்றிப் பல அக்காமாரும் தங்கைமாரும் எனது ஊரையும் பெயரையும் பல்வேறு விடயங்களையும் கேட்டார்கள். நான் எல்லாவற்றிற்கும் பதில் சொல்லிவிட்டு அவர்களையும் விசாரித்தேன். அவர்கள் என்னைப் பாட்டுப்பாடச் சொன்னார்கள். நான் பாடியவுடன் கெட்டிக்காரி என்று என்னைப் பாராட்டினார்கள். எம்மை வரவேற்ற அம்மைதான் இல்லத்தின் தலைவி என்றும் அவரைப் பெரியம்மா என்று கூப்பிடுவார்கள் என்றும் சொல்லித்தந்தார்கள்.

மாலையில் பெரியம்மா என்னை அழைத்துப் புத்திமதி சொல்லித்தந்தார். அன்பாகத் தடவி ''நல்ல பிள்ளையாக'' இருக்க வேண்டும் என்று கூறி என்ன வேண்டும் என்று கேட்டு எனக்கு வேண்டிய உடைகளும் போர்வையும் சவர்க்காரமும் தந்தார். பின் இரவுச் சாப்பாடு சாப்பிட்டோம். பின் 9 மணியளவில் திரியம்பக மந்திரம் சொல்லித்தந்தார்கள். நானும் சொல்லிவிட்டுப் படுக்கையை விரித்து நித்திரைக்குச் சென்றேன். இதுவே எனது முதல்நாள் அனுபவமாகும்

பா. கிரிஜா
ஆண்டு 8

❋

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1988 இல் இல்லச் சிறுமிகளுக்கு
சைவமய தீட்சை வைக்கப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# எனது கதையைச் சொல்கிறேன்

எனது பெயர் இராஜலக்ஷ்மி. நான் திருக்கோபுரம் மகளிர் இல்லத்தில் இருக்கிறேன். என் வயது 12. நான் சைவப்பிரகாச வித்தியாசாலையில் 6ஆம் வகுப்பில் படிக்கிறேன்.

நான் பிறந்த சில மாதங்களில் என் அப்பா, என் அம்மாவையும் என்னையும் கைவிட்டு விட்டார். குறைந்த வயதே ஆன என் தாயார் முத்தையன்கட்டு என்ற கிராமத்தில் வறுமையுடன் வாழ்ந்து வந்தார். எனது இரண்டாவது வயதில் நெல்லியடியை அண்டிய பகுதியில் உள்ள ஓர் வீட்டில் பணிப்பெண்ணாகப் பணியை ஆற்றி வந்தார். என்னையும் அயலில் உள்ள இன்னொர் வீட்டில் இருந்த அம்மா எடுத்து வேலை செய்யும்படி விட்டார். நான் சிறுமி அந்த வீட்டில் சிறு சிறு வேலைகள் செய்து வந்தேன். நான் சிறு குழந்தை ஆதலால் பல தவறுகள் செய்து இருப்பேன். அந்த வீட்டு அம்மா என்னை அடிப்பார், ஏசுவார். நான் அழுது கொண்டே வேலை செய்வேன். என் தாயார் பணிசெய்த வீட்டின் தலைவரின் நண்பர் தான் துர்க்கை அம்மன் கோயில் செயலாளராக இருந்த திரு. க. தனிநாயகம் ஐயா அவர்கள். அவர் என் தாயாரிடம் மிகவும் இரக்கம் உள்ளவர். என்னைப் பற்றிக் கேட்டு மிகவும் கவலை அடைந்தார். என்னை வந்து பார்த்தார். கையுடன் என்னை அழைத்துச்சென்று பெரியம்மாவிடம் ஒப்புவித்தார். என்னைப் பற்றியும் என் தாயின் நிலை பற்றியும் பெரியம்மாவிடம் சொன்னார். உடனேயே பெரியம்மா என்னை அணைத்துக் கொண்டார். அந்த நாளை மறக்கவே இல்லை. 1986ஆம் ஆண்டு [illegible] மாதம் 14ம் திகதி எனக்குப் பொன்னான நாள். கடந்த 7 வருடமாக இந்த மகளிர் இல்லத்தில் வாழ்கிறேன். இன்று எனக்கு அம்மாள் அருளாலும் பெரியம்மாவின் அரவணைப்பாலும் ஒரு குறையும் இல்லாமல் இந்த இல்லத்தில் அனைவருடைய அன்புக்குரியவளாக வாழ்கிறேன். நல்ல சைவப் பழக்கவழக்கங்களுடன் வளர்கிறேன். பல்வித நல்ல அறிவுகளைப் பெறுகிறேன். கலைநிகழ்வுகளில் பங்கு கொள்கிறேன். ஆலயத்தில் சரியைத் தொண்டுகள் செய்கிறேன்.

இவை எல்லாம் அம்மாள் அருளே என்று நம்பி வணங்குகிறேன்.

வி. இராஜலக்ஷ்மி
ஆண்டு 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# நான் பண்ணிசையில் பெற்ற பரிசில்கள்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட எனது குடும்பத்தில் மூன்று பிள்ளைகளே. இரண்டு ஆண்மக்களுடன் நான் கடைசி மகளாகவும் இருந்தேன். என்றும் எமது தந்தையார் இறந்தமையால் அம்மாவிற்கு எம்மை வளர்த்தெடுப்பது மிகவும் கஷ்டமாக இருந்தது. அண்ணன்மாரும் சிறியவர்கள், எந்நேரமும் எங்கள் எதிர்காலத்தை நினைத்துக் கவலைகொண்டிருந்த அம்மாவிற்கு பிரசித்த நொத்தாரிசு நீதவானுமாகிய திரு. ப. கதிரவேலு அவர்கள் தெல்லிப்பழையில் ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான சைவ இல்லமாக விளங்கும் மகளிர் இல்லத்தில் என்னைச் சேர்க்கும்படி ஒரு நற்செய்தியைக் கூறினார். எனது தாயாரும் மிகவும் மகிழ்ந்து என்பிள்ளை ஒரு புனித அன்னையின் நிழலில் வளர்ந்து நன்றாய் வரப்போகிறாள் என்று திடமான நெஞ்சத்துடன் எனது எட்டாவது வயதில் 1982ஆம் வருடம் மாசி மாதம் எட்டாம் திகதி தேவஸ்தான தலைவி அம்மையாரிடம் ஒப்படைத்தார். முன் நல்வினைப் பயனோ தெரியவில்லை நான் என் வீட்டுக் கவலைகளையெல்லாம் மறந்து என்னுடன் இருக்கும் மற்றும் ஒன்பது சகோதரிகளுடனும் இன்பமாக இருந்தேன்.

அம்மா அவர்கள் அன்புத் தாயாக எம்மை அரவணைத்து பள்ளிக்கு அனுப்பி படிக்க வைத்தார்கள். பள்ளிப்படிப்புடன் நின்றுவிடாது தேவஸ்தானத்துடன் அமைந்த எமது இல்லத்துப் பிள்ளைகளை தேவார வகுப்பிற் சேர்த்து பஜனை செய்யும் வகையில் பழக்கி எடுத்தார். இயற்கையிலேயே இசைவளம் சிறிது பெற்றிருந்த எனக்கு எம்மை வளர்த்தெடுக்க முன்வந்த அம்மா அவர்கள் தன் கணீர் என்ற மணிக்குரலில் தேவார பாராயணம் செய்யும் போது முதலிடம் தந்து வந்தார். இறைவனுக்கு ஏற்ற இசைவளத்தைப் பஜனை செய்யும் வகையில் தன் அருள் ஆசியால் ஆசீர்வதித்துப் பெற்றுத்தந்துவிட்டார் என்று பெருமிதத்துடன் கூறிக்கொள்கிறேன். இப்படியாக தேவார வகுப்பில் கலந்து கொண்ட நாம் காலப்போக்கில் ஆலயக் கூட்டு வழிபாட்டுப் பஜனைகளிலும் ஈடுபடுத்தப்பட்டோம். வாராந்த செவ்வாய்க்கிழமைகளிலும். ஆலய மகோற்சவங்களிலும், மற்றும் விசேட தினங்களிலும் கூட்டு வழிபாடு பஜனைகள் ஆகியவற்றில் அம்மா அவர்களுடன் கலந்து கொண்டோம். அம்மா அவர்களால் பண்ணிசையில் ஈடுபடுத்தப்பட்ட நாம் பாடசாலைப் பண்ணிசைப் போட்டிகளிலும் பங்குபற்றலானோம். எந்தெந்தப் போட்டிகளில் பங்கு கொண்டோமோ அந்தந்தப் போட்டிகளில் எல்லாம் நான் சான்றிதழ்களும், பரிசில்களும் பெறத்தவறியதே கிடையாது. சமய ரீதியாகப் போட்டியில் கலந்து கொண்ட நாம் பின்னர் தமிழ்த்தினப் போட்டிகளிலும் பங்குகொள்ளலானோம்.

முதன்முதலாகச் சிவநெறிக் கழகத்தினரால் நடாத்தப்பட்ட ஆரம்ப பண்ணிசைப் போட்டியில் நான் பதினொரு வயதுச் சிறுமியாக இருக்கும்போது பங்குபற்றி சான்றிதழைக் கீரிமலைச் சிவன் கோவிலில் பெற்றுக்கொண்டேன். அதே வயதில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கல்வி கற்ற நான் யூனியன் கல்லூரியில் நடாத்தப்பட்ட தமிழ்த்தினப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செல்வி வி. வடிவாம்பிகை
பண்ணிசைக்கான முதற் பரிசைப் பெறுகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பா ஓதல் போட்டியில் கலந்து இரண்டாம் இடத்தைப் பெற்றேன். என் கல்வி அறிவை கணித்த அம்மா அவர்கள் மங்கையற்கரசி மகா வித்தியாலயத்தில் என்னைச் சேர்ப்பித்தனர். அங்கு கல்வி பயின்ற வேளையிலும் பல பண்ணிசைப் போட்டிகளிலும் தமிழ்த்தினப் பா ஓதல் போட்டிகளிலும் பங்குபற்றிச் சிறப்புச் சான்றிதழ்களைப் பெற்றேன். யாழ்ப்பாணம் இந்து இளைஞர் பேரவை மாநகராட்சி மன்றம் நடாத்திய பண்ணிசைப் போட்டியில் சான்றிதழும், பரிசிலும் பெற்றேன். தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் வெள்ளி விழாவை முன்னிட்டு மாவட்டங்களை மட்டமாக நடாத்திய பண்ணிசைப் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பெற்று சான்றிதழும் [illegible] பரிசில்களும் பெற்றேன். இவ்வாறு போட்டிகளில் கலந்து கொண்ட என்னை அம்மா அவர்கள் மாகாணமட்ட, தேசியமட்ட போட்டியிலும் கலந்து கொள்ள அனுமதித்தனர். அங்கும் நான் திறமைச் சித்தி பெற்று பெருமையை இந்து சமய கலாச்சார அலுவல்கள் திணைக்களத்திலும் சிறப்புச் சான்றிதழும் பெற்றேன். சைவ மங்கையர் இல்ல வருடாந்த பரிசளிப்பு விழாவை முன்னிட்டு நடாத்தப்படும் பண்ணிசைப் போட்டியில் ஒவ்வொரு வருடமும் நானே முதலாம் இடத்தைப் பெறுவேன்.

சான்றுடைய பரிசில்களைப் பார்த்து நீங்கள் ஆச்சரியப்படக் கூடும். உண்மையில் பொறுமை, பாராட்டுதல் அனைத்தும் எம்மை இவ்வாறு சமுதாய நிறைவுள்ள சீரிய முறையில் வழிநடத்தும் எங்கள் இல்லத் தாயாகிய பெரியம்மாவிடமும், அன்னையுடைய விருப்பத்திற்கிணங்க பண்ணிசையில் எங்களை சிறந்த முறையில் பயிற்றுவித்த திருமதி இ. சிவப்பிரகாசம் அவர்களையுமே சாரும்.

சங்கீத வித்துவான் திருமதி சிதம்பரநாதன் அவர்கள் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் விரிவுரையாளராக கடமையாற்றுபவர். பல சிரமத்தின் மத்தியிலும் மிகுந்த ஆர்வத்துடனும், அன்புடனும் எங்களுக்காக நேரத்தை ஒதுக்கி இரவு பகல் பாராது வந்து எங்களுடன் நின்று பண்ணிசையின் நுட்பங்களை பயிற்றுவிப்பார். எங்கள் பிழைகளைப் பொறுமையுடன் கருத்திற்கொண்டு பல முறையில் திருத்தங்கள் செய்து இசை அறிவையும், திறமையையும் ஊட்டுவார்.

இப்படியாக என் இசைவளர்ச்சிக்கு அம்மாவின் அருளும், பெரியம்மாவின் அன்பும், இந்த இசையாசிரியையின் பயிற்சியுமே காரணம் என்பதை நான் நன்றாக உணர்ந்திருக்கிறேன். இம் மூன்று தெய்வ அன்னைகளையும் என் இதயக் கோயிலில் வைத்து என் இசையிலும் என் அன்பிலும் என்றென்றும் பூஜிக்கிறேன்.

வி. லோகாம்பிகை
ஆண்டு 11
வயது 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அதிசயப்படுவீர்கள்


பெற்றோரைத் தெரியாது. பிறந்த இடமும் தெரியாது, வயது எத்தனை என்று தெரியாது இந்த நிலையில் பல இடங்களில் என்னை அமர்த்தி வீட்டுவேலை வாங்கப்பட்டது. ஆனால் எங்கெங்கு இப்படி நடந்ததென்பதை என்னால் விளங்க வைக்க முடியாது. இவ்வாறு இருக்கும் நாளில் நானிருந்த வீட்டுக்காரரின் தொல்லைகளினால் அங்கிருந்து வெளிக்கிட்டு அநாதரவாக வீதியில் ஒரு கடையோரத்தில் தங்கியிருந்தேன் என்னைக் கண்ட சில அண்ணன்மார் என்மீது இரக்கம் கொண்டு அழைத்தனர். ஆனால் நான் அவர்களைக் கண்டு பயந்து விட்டேன். என்றாலும் வாகனம் ஒன்றில் ஏற்றி துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் கொண்டு வந்து சேர்த்தனர். கோயில் அம்மாவைக் கண்டு ஒழுங்குகளைச் செய்து என்னை இங்கிருக்கும்படி சொல்லிவிட்டு அவர்கள் போய் விட்டார்கள். ஆனால் அலைந்து திரிந்த எனக்கு இந்த அமைதியான இடம் அவ்வளவு பிடிக்கவில்லை. மனக் குழப்பம் ஏற்பட்டு பலமுறை இல்லத்தை விட்டு ஓடிவிட்டேன். இதனால் தெல்லிப்பழை மனநோய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மருந்து எடுத்து வந்தேன். எனது குழப்ப நிலை என்னை நீதிமன்றம்வரை செல்ல வைத்தது. நீதவானும், வைத்தியர்களும் ஒரே கருத்தைத் தந்தார்கள். நன்றாகக் கும்பிட்டு ஏனைய பிள்ளைகளோடு சேர்ந்து விளையாடி இல்லத்தினரின் அன்பைப் பெற்று இருக்கும் நிலையையே அவர்கள் வற்புறுத்தினர்.

இப்பொழுது நான் எழுத வாசிக்கக் கப் பழகி விட்டேன். பக்திப் பாடல்கள் நன்றாகப் பாடுவேன். நன்றாக வேலை செய்கிறேன். 65 சகோதரிகளும் என்னை ' பூமக்கா ' என்று அழைப்பார்கள். எங்கள் பெரியம்மா எனக்குத் தங்கச் சங்கிலியும், தங்கத் தோடும் வாங்கித் தந்திருக்கிறா. இவ்வளவிற்கும் என்னை ஆளாக்கி விட்டவர் எங்கள் பெரியம்மாவே. நான் செய்யும் பணிக்கு ஏற்ற பரிசுகளும் அவ்வப்போது கிடைக்கிறது, இப்பொழுது நான் மற்றவர்கள் மதிக்கக்கூடிய ஒரு பெண்ணாக மாறிவிட்டேன். மகளிர் இல்லமும், துர்க்காதேவியும், எங்கள் பெரியம்மாவும் என்னை உருவாக்கி விட்டதை என்றும் மறக்க மாட்டேன். நான் இங்கு வந்து ஏழு ஆண்டுகள் கழிந்து விட்டன. என் வாழ்வு இல்லத்தோடு என்றும் இயைந்து நிற்குமென்பதில் சந்தேகமில்லை.


பூமலர்
(வயது 24 மதிப்பிட்டது)
மகளிர் இல்லம்
துர்க்காபுரம்

✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளையாட்டுப் போட்டியில் இல்லக்கொடியை வலிவடக்கு உ. அ. அதிபர் திரு. கா. சந்திரராசா அவர்கள் ஏற்றி வைக்கிறார்.



1991ல் நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் குத்துவிளக்கேற்றல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பிழையின்றி அழகாக எழுதுவதில் பாராட்டுப் பெறுபவள் நான்

நான் இப்பொழுது மானிப்பாய்க் கல்லூரியில் ஆண்டு பன்னிரண்டில் கல்வி பயின்கிறேன். 1984 ஆம் ஆண்டு ஆர்க்காபுரம் மகளிர் இல்லத்தில், வட்டுக்கோட்டை அரிமாக் கழகத்தினரால் சேர்க்கப்பட்டேன். எனது கையெழுத்து அழகானது என்பதாலும் பிழையின்றி தமிழ் எழுதுவேன் என்பதாலும் பெரியம்மாவின் இருமுறை பட்டியில் எனக்குப் பணி தரப்பட்டது. பாடசாலை நேரம் பொருந்திய நேரமெல்லாம் இருமுறை மடத்தில் பணியாற்றுவது மனத்து மகிழ்ச்சி. ஆனால் அம்மாவிடம் எனக்குக் கொஞ்சம் பயம், பிழைகள் விட்டால் கண்டிப்பு அதிகம். உடனே எனக்குக் கவலை கிளைக் கண்ணீர் வரும். என்றாலும் அடுத்த கணமே நேரம் என்னை அழைத்துப் புத்திமதி கூறுவார் எங்கள் அம்மா. அவ அடிக்கடி சொல்வது ஒரு வசனம் "செவி வைத்தும் பொறுமையோடு இருந்து கேட்டு முன்னேற வேண்டும்" என்பது தான்.

என்னைப் பெற்ற அம்மா புற்றுநோய் வாய்ப்பட்டு இருக்கிறா. சகோதரர் இருவர். தந்தை இல்லை. ஏழ்மையான குடும்பம் என்றாலும் கல்வியில் ஊக்கமுள்ள குடும்பம் எங்களுடையது. எதிர்காலம் கல்வியில் முன்னேற்றம் கண்டு நான் பிறந்த வீட்டுக்கும் வளர்கின்ற இல்லத்துக்கும் எனது இனத்துக்கும் இயன்ற வகையில் பணி புரிந்து ஒரு நற் பிரஜையாக வாழ்வேன் என்பது திண்ணம். அம்பாள் அருள் அனைத்தையும் நிறைவேற்றட்டும்.

த. துவனேஸ்வரி
ஆண்டு 12
வயது 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# எமது இல்லத்தில் ஒரு நாள் வாழ்வு

காலை 4 - 30 மணிக்கு எல்லோரும் எழும்புங்கள்! "கோயில் கூட்டும் பிள்ளைகள் போய்விட்டார்கள். நீங்களும் எழும்புங்கள்" என்று பெரிய அக்காளின் குரல் ஒலிக்கிறது. நாங்கள் எழும்புகிறோம். நான் "ஓம் துர்க்கா சரணம்" என்று பிரார்த்தித்துக் கொண்டு எழும்புகிறேன். பின் தொட்டியில் ஒரே கூச்சல். அக்காமார் குளிக்கிறார்கள். நானும் ஓடுகிறேன். காலைக் கடனைக் கழித்து குளிக்கிறேன். சில நிமிடங்களில் இல்லக் கடமைகளைச் செய்ய ஆயத்தம் ஆகிறேன். மங்கையர்க்கரசி இல்லத்தைச் சேர்ந்த நான் எமது சகமாணவிகளோடு சேர்ந்து இல்லக் கடமைகளைச் செய்கிறேன். காலை 6 – 00 மணிக்கு மணி அடிக்கிறது. தேநீர் குடிக்கிறோம். வீதி சுற்றி பஜனை செய்கிறோம். 6 – 45 மணிக்கு பெரியம்மாவுக்கு வணக்கம் கூறி விட்டு வருகிறோம். பாடசாலைக்கு வெளிக்கிடுகிறேன். உணவுக்கு மணி அடிக்கிறது. (7 – 15 காலை உணவு) 7–30 மணிக்கு பாடசாலைக்குச் செல்லும் வரிசைக்கு ஓடுகிறேன். மூன்று வரிசையில் இல்ல மாணவிகள் தம் பாடசாலைகளான மகாஜனக் கல்லூரி, மல்லாகம் மகாவித்தியாலயம், சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு சென்று கொண்டிருக்கின்றனர். நான் மகாஜனக் கல்லூரியினருடன் சேருகிறேன். பி. ப. 2 – 00 மணிக்கு பாடசாலை முடிவடைகிறது. நான் 2 – 45 மணிக்கு இல்லத்தை அடைகிறேன். உடைகளை மாற்றுகிறேன். கை, கால், முகம் கழுவுகிறேன். பசியுடன் வந்த நாங்கள் சாப்பாட்டு அறையை நோக்கி விரைகின்றோம். அங்கு தேவாரம் படித்துவிட்டு உணவை உண்கிறேன். பின் இல்லக் கடமைகளை செய்கிறேன். எனது நண்பிகளோடு சேர்ந்து விளையாடும் பொழுது பிரத்தியேக பாட ஆசிரியர் வந்து விட்டார் என்று சக நண்பர்கள் கூறுகிறார்கள். நான் வகுப்பறையை நோக்கி ஓடுகிறேன். அங்கு 3 – 00 — 4 – 00 மணி வரை விஞ்ஞானப் பாடம் படிக்கிறேன். மணி அடிக்கிறது நாங்கள் தேநீர் குடிக்கிறோம். அன்று வெள்ளிக்கிழமை சுற்றிப் படிக்க போக வேண்டும் சுற்றிப் படிக்கப் போக ஆயத்தமாகிறேன். அங்கே அக்காமார் சிவபுராணம் சொல்லித்தர நாம் எல்லோரும் படிக்கிறோம். பின் திருமுறை மடத்தில் பூசையைத் தரிசிக்கிறேன், பின்னர் பெரியம்மா எங்களுக்கு அறிவு புகட்டும் கதைகள் சொல்கிறார். அத்துடன் பெரியம்மா எங்களுக்கு சிற்றுண்டி தருகிறார். மீண்டும் 5 – 00 மணிக்கு கோயில் பூஜை மணி கேட்கிறது. நாம் எல்லோரும் ஆலயத்திற்கு செல்கிறோம். பூசை முடித்துப் பஜனை படித்துவிட்டு இல்லத்துக்கு திரும்புகிறோம். கோயிலால் வந்து எனது பாடங்களைப் படிக்கிறேன். 7 – 30 மணிக்கு இரவுச் சாப்பாட்டிற்கு மணி அடிக்கிறது நாம் சென்று சாப்பிட்டு விட்டு வந்து எனது பாடங்களை 9 – 00 மணி வரை படிக்கிறேன். 9 – 00 மணிக்கு இரவுப் பிரார்த்தனை திரியம்பகம் எல்லோரும் சேர்ந்து கூறி விட்டு நித்திரை செய்கிறோம்.

க. சுமதி
ஆண்டு 7
(1990ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பெற்றவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மெய்வல்லுநர் போட்டியில்
செல்வி ச. இராசஸ்ரீ அவர்கள்
உறுதிமொழி பகர்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# மகளிர் இல்ல வாழ்வில் எமது புனித பயணங்கள்

சமய வாழ்வில் பல ஒருமைப்பாட்டுக்கு ஆலய வழிபாடு மிகவும் அவசியமாகின்றது. அம்பாள் ஆலயத்தில் ஒரு அங்கமாக அமைந்திருக்கும் மகளிர் இல்லத்தில் வளர்ச்சியடையும் சிறுமிகளாகிய எங்களுக்கு சமய வழிபாட்டிற்கும் ஆலய வழிபாட்டிற்கும் குறைவேயில்லை.

இல்லச் சிறுமியரின் சமய வாழ்வு வளர்ச்சியடைய பல புனித பயணங்கள் காலத்துக்குக் காலம் ஏற்பாடு செய்யப்படுவதுண்டு. எமது குழந்தைப் பருவம் முதல் சமீபத்தில் உள்ள ஆலயங்களின் மகோற்சவங்களில் வருடா வருடம் பங்கு பற்றி வழிபாடு பஜனைகள் செய்து வருகின்றோம். இக் கோயில்களுக்கு நாம் பாத யாத்திரையாகச் சென்று வணங்கி வருவோம். குழந்தைப் பருவம் நீங்கிச் சிறுமியராக வளர்ச்சியடைந்த போது பிரசித்தி பெற்ற கோயில்களான நல்லூர் கந்தசாமி கோயில், அன்னதானக் கந்தன் வீற்றிருக்கும் செல்வச்சந்நிதி முருகன் கோயில், ஈழத்துச் சிதம்பரம் என்று போற்றப்படும் காரைநகர் சிவன் கோயில், புகழ்பூத்த வல்லிபுர ஆழ்வார் ஆலயம், அடர்ந்த காட்டின் நடுவே ஆபத்துக்களைக் காப்பவராக அமைதியாக வீற்றிருக்கும் இலுப்பைப் பிள்ளையார் ஆலயம், பழமை வாய்ந்த மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில், ஆழ்கடலின் நடுவில் அறுபத்திநாலு சக்தி பீடங்களில் ஒன்றாக விளங்கும் நயினை நாகபூஷணி ஆலயம், வண்ணார்பண்ணைச் சிவன் கோயில், உடன் கந்தசாமி கோயில் போன்ற திருத்தலங்களுக்குச் சென்று வழிபாடு பஜனைகள் செய்து எள்ளெண்ணெயினை எரித்து, பொங்கல், பூசைகள் செய்து வழிபட்டு வருவோம்.

மேலும் நாங்கள் வளர்ச்சி அடைந்ததும் எமது உள்ளங்களில் தெய்வ சிந்தனையை வலுப்படுத்த நீண்ட தூர புனித பயணங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. பாடல் பெற்ற தலமான திருக்கேதீஸ்வரப் பயணம் மிகமிகப் புனிதமானது. சிவராத்திரிக்குப் பேர்போன திருக்கேதீஸ்வர மகோற்சவத்தில் பங்கு பற்றி அங்கு தங்கி நின்று எமது சிந்தனையையும், இறை வழிபாட்டையும் புனிதமாய் ஆக்கினோம்.

நாம் செய்த புனித பயணங்களில் திருக்கேதீஸ்வர பயணத்தைப் பற்றி சற்று விரிவாக நோக்குவோம். இத் திருக்கேதீஸ்வரப் பயணமானது 1989ஆம் ஆண்டு வைகாசி மாதம் 18ஆம் திகதி ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்திலிருந்து இல்லச் சிறுமியர்களாகிய நாம் மதிப்புக்குரிய அம்மாவுடன் செல்லத் தயாரானோம். எங்களுடன் துர்க்கா தேவி நிர்வாக சபையினரும், பெண்கள் தொண்டர் சபையினரும் மற்றும் சில அடியார்களும் வந்து எமது புனித யாத்திரையில் பங்கு கொண்டனர். எமது யாத்திரையை காலை 7-00 மணிக்கு அம்பாளின் அருட்பாடல்களுடன் ஆரம்பித்தோம். நாம் திருக்கேதீஸ்வரத்தை நோக்கிச் செல்லும் போது அம்பாளின் கருணையால் எமக்கு ஒரு துன்பமும் ஏற்படவில்லை. தொடர்ந்து செல்லும் போது பல கண்கொள்ளாக் காட்சிகளைக் கண்டோம். பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சங்கத்தில் அம்மா அவர்களுடன் எல்லோரையும் வரவேற்று உபசரித்தனர். அங்கு சிறிது நேரம் இளைப்பாறி விட்டு பின்னர் எமது பயணத்தைத் தொடர்ந்து முழங்காவில் பிள்ளையார்கோவிலில் மதிய போசனம் முடித்து விட்டு எம்பெருமான் சந்நிதியை அணுகியதும் நாம் எல்லோரும் ஆனந்தப் பெருங்கடலில் ஆழ்ந்தோம். பாலாவி தீர்த்தத்தில் நீராடியதும் நமது பாவமெலாம் குறைவதுபோல் தோன்றியது. அங்கு உள்ள திருவாசக மடத்தில் நாம் தங்குவதற்கு வசதி செய்து தரப்பட்டது. பின்னர் ஆலயத்துக்குள் சென்று பேரானந்தமுடன் வழிபட்டு அங்கு மகோற்சவ கிரியைகளைக் கண்டு ஆனந்தப்பரவசம் அடைந்தோம்.

மறுநாள் சித்திரத்தேரில் எம்பெருமான் சோமஸ்கந்த மூர்த்தியாகப் பவனி வந்தார். ஐந்து தேர்கள் இழுக்கப்பட்டன. அம்பாளின் தேரைப் பெண்களே இழுத்து மகிழ்ந்தனர். இராஜகோபுரத்தை மயில்களும், திருவீதியை அடியார் கூட்டமும் அழகுபடுத்தின. அன்று இரவு உற்சவத்தின் போது அம்மாவின் அருளுரை நடைபெற்றது. மறுநாள் தீர்த்த உற்சவத்தை தரிசித்தோம். தீர்த்தக் காவடியில் நாமும் பங்கு கொண்டோம். கோயிலைச் சுற்றிப் பார்வையிடும் போது அம்மா அவர்கள் பல சரித்திர விளக்கங்களைத் தந்தார். போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட பழைய ஆலயத்தின் பகுதிகளைக் கண்டோம். எமது வழிபாட்டை நிறைவு செய்து கொண்டு எமது ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தை வந்தடைந்தோம்.


நடமாடும் தெய்வமாகிய பெரியம்மாவின் அரவணைப்பில் சிறுமியராகிய எங்கள் வாழ்வும் புனித நிகழ்வாக அமைந்துள்ளது. இதை எண்ணி நான் பெருமையடைகிறேன்.

த. மஞ்சுளா
ஆண்டு 11
(வயது 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இல்லச் சிறுமிகளின் அணிநடை நிகழ்ச்சி




வாசுகி இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திலகவதி இல்லம்



மங்கையர்க்கரசி இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

# நன்றி மறப்பது நன்றன்று

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

இச்சிறுமை எமது நன்றிக்குரியோரை நினைவூட்டுகிறது. இந்த வயது நிரம்ப முன்னே இருவரின் அன்னையை இழந்து விட்டோம். எனக்குச் சகோதரர்கள் எட்டுப்பேர் இருவர்களாகிய எம்மை வளர்க்க தந்தையார் மிகவும் கஷ்டப்பட்டார். எமது பாடசாலை அதிபர் திரு. க. சிவஞானசேகரம் எம்மில் இருவரை 03-03-1988இல் இல்லத்தில் சேர்த்து விட்டார்.

அம்மையாரின் மறைவையொட்டி ஏற்பட்ட வெளியீடு எமது தாயாரின் இழப்பு நினைவைத் தந்தது. அன்பு வார்த்தைகளால் அரவணைத்து அம்மா அவர்கள் எம்மை வழிநடத்த ஆசிரியைகளையும் நியமித்தார். ஆரம்ப காலத்தில் பாலர்களாகிய எம்மை பராமரிக்கப்பட்டது செல்வி மணிமேகலை ஆசிரியர் அவர்களாலும், அவருக்கும் எமக்கும் பேரன்பு செலுத்தி ஆக்கபூர்வமாக உதவியவர்களில் மஞ்சுளா அக்கா, சுகந்தினி அக்கா, விமலினி அக்கா. இல்லத்துக்கு ஆச்சி ஆசிரியர்களை மறக்கவே முடியாது. எமக்கு வேண்டிய சுகாதார ஆரோக்கிய சேவைகளை வைத்திய கலாநிதி டாக்டர் இ. தெய்வேந்திரமும் வைத்திய அத்தியட்சகர் திரு. சி. கதிரவேற்பிள்ளை அவர்களும் கவனித்து வந்தனர்.

1989இல் திருமதி ம. கைலாசலிங்கம் நத்தாலினை மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டு தாய் அன்புடன் எம்மைப் பராமரித்து வந்தார். இங்கேயிருந்து தேர்வுகப் பரீட்சை ஏழும் சிறந்த நிலையைப் பெற்று இல்லத்தின் மேற்பார்வையாளராக இன்று வரை செல்வி கா. சந்திரதயா அவர்கள் கடமையாற்றி வருகின்றார். இவர் கல்வி, ஒழுக்கம் மற்றும் சகல துறைகளிலும் எங்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் வழங்கி வருகின்றார். மாணவர் தொகை இல்லத்தில் அதிகரித்து வரும் வேளையில் இவருக்கு உதவியாக திருமதி உ. செல்வராஜா, செல்வி செ. பெரியதம்பி, சகோதரி பத்மாவதி அம்மா அவர்களும் நியமிக்கப்பட்டு பிள்ளைகளின் வளர்ச்சிக்கு வேண்டிய உதவிகளைச் செய்து வருகின்றனர்.

நிர்வாகசபையினர், பெண்கள் தொண்டர் சபையினர், இந்து இளைஞர் சங்கத்தினர் விளையாட்டுத் துறையில் திரு. க. அருந்தவராஜா அவர்களும், மற்றும் பிரதியோக பாடபோதனைக்கு அவ்வப்போது நியமிக்கப் பட்டவர்களும் எமக்கு பல ஆக்கங்களைத் தந்து ஊக்குவித்து உதவிகளும் செய்தனர். எமது நிர்வாகச் செயலாளராக இருந்த திரு. க. தணிகாசலம் ஐயாவும் எமக்கு ஓர் தந்தைபோல் இருந்து பல ஆதரவுகளை நல்கினார்.

ஒன்றும் அறியாப் பாலராக வந்த எம்மை இன்று பலரும் மெச்சும் வண்ணம் முன்னேற்றமடையக் காரணமாக இருந்த ஒவ்வொருவரையும் இதய பூர்வமாக நன்றி செலுத்தி எம்மை ஆளாக்கும் அம்மாவின் மலரடிகளில் வணங்கி நிற்கின்றேன்.

அ. மேனகா
ஆண்டு 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்


# அழுதுகொண்டு வந்தேன்
# இன்று சிரித்துக்கொண்டு தலைமை தாங்குகிறேன்

எனது பெயர் நளாயினி. பிறந்த இடம் நாரந்தனை. அப்பாவின் அரவணைப்பு இல்லை அம்மாவின் ஆலோசனைப்படி துர்க்காபுரம் மகளிர் இல்லத்தில் 1982ஆம் ஆண்டு நானும் என் தங்கையும் சேர்க்கப்பட்டோம். ஆனால் அம்மாவின் பின்னால் அழுது கொண்டு ஓடினேன், கூச்சலிட்டேன், பிடித்து இழுத்து வந்து அம்மா திரும்பவும் சேர்த்தபோதும் எனக்கு அழுகை நிற்கவில்லை. பெரியம்மா துர்க்கா துரந்தரி அவர்கள் அணைத்து எத்தனையோ அன்பு மொழி கூறிச் சாந்தப் படுத்தினார். எனக்கு அவை எல்லாம் வேப்பங்காயாகக் கசந்தது. என்றாலும் நாளடைவில் கொஞ்சம் கொஞ்சமாக ஆறுதல் அடைந்து விட்டேன். எனக்கு ஒரே ஒரு தம்பி; சித்த சுவாதீனம் அற்றவர். பெரிய குழப்படி; ஒரு நாள் சங்குவேலியில் அம்மாவுடன் தங்கியிருந்த போது கோவில் குளத்தில் தவறி விழுந்து இறந்துவிட்ட செய்தி என்னைப் பெரிதும் வருத்தியது. இதனால் பல முறை மயக்கம் வந்து நான் வீழ்ந்து விடுவதும் உண்டு.


இன்று நான் 12ம் ஆண்டில் மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்கிறேன். மங்கையர்க்கரசி இல்லத்தின் தலைவியாக விளங்குகிறேன். 1989-1991 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும் எமது இல்லம் முன்னணியில் இடம் பெற்று சுழல் கேடயத்தைப் பெற்றுக் கொண்டது. பல தடவைகளில் பேச்சுப் போட்டிகளில் நான் 1ஆம் இடம் பெற்றுள்ளேன். கல்வியில், கடமையில், பண்பாட்டில் முன்னேறி நற்பிரசையாக வாழ்வேன் என்பதைத்தான் என்னால் கூறமுடியும். இவை அனைத்தும் துர்க்கையின் அருளால் நிறைவேறட்டும்.

ச. நளாயினி
ஆண்டு 12
(வயது 18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓட்டப் பந்தயத்துக்கு ஆயத்தமாதல்



விநோத உடைப் போட்டியில் காட்சி அளிக்கிருர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1990ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்
சையில் தந்தை செல்வா தொடக்கநிலைப் பள்ளியில்
கல்விகற்று விசேட சித்தியடைந்த துர்க்காபுரம் மகளிர்
இல்ல மாணவி செல்வி சுமதி கணேசன் அவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Aum

# Letter of Appreciation from Tamil Orphans Trust - London

We send greetings to the Thurkapuram Mahalir Illam on its 10th anniversary "Even the darkest cloud has a silver lining". The clouds of darkness hang over the innocent lives of every body in the North - East of Sri Lanka. It is particularly so with the children who are orphaned in everyway. The Thurkapuram Mahalir Illam under the able and dedicated services of Miss Thangammah Appakuddi shines like a silver lining in these clouds of darkness. At a time when basic human rights are denied to hundreds and hundreds of children for no fault of theirs it gives us enormous feelings of comfort and solace to have in our midst a "Mother Theresa" who along with her dedicated group of administrative body is providing the best possible for these unfortunate children in particular, and the people in general. It is heartening to know that not only the basic needs of life - food, shelter and clothing - but also an education needed for their cultural and economic betterment is provided.

The humble but substantial assistance we provide from this end towards your magnificient efforts clears in us a little of guilt that we are not with you physically and justifies our existence here.

We are happy to do our best in everyway possible and we wish and pray the almighty DHURKA DEVI will grant you the strength to withstand the continuing turmoil that is plaguing our people.

May God Bless you

19th Jan 1992

The Board of Trusties,
Tamil Orphans Trust.
U. K.

✱

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகளிர் இல்லப் பத்தாண்டு நிறைவு விழா மலர்
# வெளிவர உதவியோருக்கு
## நன்றி நவிலல்

1. குறுகிய காலத்தில் இம்மலரை வெளியிடுவதற்கு உதவியாக அச்சு வேலைகளையும் அமைப்புவேலைகளையும் செம்மையாக நிறைவேற்றித் தந்த சுன்னாகம், திருமகள் அழுத்தக முகாமையாளர் திரு. ச. இராசரத்தினம் அவர்களுக்கும், மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும்

2. சிறந்தமுறையில் இம்மலர் வெளிவர உதவியாகக் கொழும்பு சென்று நாற்பது பட புளொக்குகளை உருவாக்கியதுமன்றி போக்குவரவுச் சீர்குலைவிலும் இங்கு எடுத்துவந்து உதவிய தெல்லிப்பழை அன்பர் திரு. சின்னப்பா புஷ்பநாதன் அவர்களுக்கும்.

3. ஒலி, ஒளி வாய்ப்புகளை ஏற்படுத்தியும், புகைப்படமெடுத்தும் உதவி புரிந்த கிருபா போட்டோ உரிமையாளர் திரு. கா. கிருபாகரன் அவர்களுக்கும்.

4. ஆதரவற்ற இப்பிள்ளைகளின் நலனை முன்னிட்டு செய்திகளையும், புகைப்படங்களையும் வெளியிட்டு உதவும் தினகரன், வீரகேசரி நிறுவனங்களுக்கும், உள்ளூர்த் தினசரிகளான உதயன், ஈழநாதம், ஈழநாடு, முரசொலி ஆகிய நிறுவனங்களுக்கும்.

5. எழுத்துப்பிழை, சொற்பிழை, கருத்துப்பிழை இல்லாமல் அமைவதற்குரிய ஒப்புநோக்குதலைச் செய்து மலரைச் செம்மையாக வெளிவர உதவிய எமது தேவஸ்தானத்தைச் சேர்ந்த திரு. கா. சிவபாலன், திரு. ச. கந்தையா ஆகியோருக்கும்.

6. இவ்விழாவை முன்னிட்டு தனது குடும்பச்சார்பில் ரூபா இருபதினாயிரம் அனுப்பி அன்பளிப்புச் செய்த விமானமோட்டி ஆர். பாலதரன் அவர்களுக்கும்

எமது இதயம் கனிந்த நன்றி உரித்தாகுக.

நிர்வாகசபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமகள் அழுத்தகம்
சுன்னாகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org